# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
Spl. **SESSIONS CASE NO. 31/19 PW. 105**

Name : திரு. ஜெகதீஷ்
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd July 2021.

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி பேராசிரியராக சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் இலாகா தலைமை மருத்துவஅதிகாரி மற்றும் பேராசிரியர் திரு.சம்பத்குமார் ஆவார். 26.06.2015 ஆம் தேதி உயர்நீதிமன்ற உத்தரவுப்படி டாக்டர் சம்பத்குமார் அவர்களுக்கு திரு. கோகுல்ராஜ் என்பவரின் உடல்கூறாய்வை செய்வதற்கான உத்தரவு வந்தது. எப்போதும் வெளியே சென்று பிரேத பரிசோதனை செய்யும்போது ஒருவராலேயே பிரேத பரிசோதனையும் செய்து கொண்டே போட்டோகிராபும், வீடியோ கிராபும் எடுக்கமுடியாத காரணத்தினால் உதவி செய்வதற்காக உதவி மருத்துவர்கள் செல்வோம். அதேபோல் 27.06.2015 ம் தேதி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு நான் மற்றும் டாக்டர் ராஜேஷ் ஆகியோர் டாக்டர் சம்பத்குமாருடன் சென்றோம். 27.06.2015 ம் தேதி கோகுல்ராஜ் என்பவரின் உடல் கூறாய்வு செய்வதற்காக பகல் சுமார் ஒன்றரை மணி அளவில் பிரேத கூறாய்வு செய்கிற இடத்திற்கு சென்றோம். டாக்டர் சம்பத்குமாருடன் டாக்டர் கோகுலரமணன், டாக்டர் சங்கீதா மற்றும் என்னுடன் வந்த டாக்டர் ராஜேஷ் ஆகியோர் சென்றோம். போலீஸ்தரப்பில் போட்டோகிராபரும் இருந்தார். பிரேத பரிசோதனை சுமார் பகல் 1.30 மணிமுதல் மாலை சுமார் 5.30 மணிவரை நடைபெற்றிருந்தபோது டாக்டர் சம்பத்குமாரின் ஆணைக்கேற்று டாக்டர் சம்பத்குமாரின் சோனி கேமராவில் புகைப்படம் எடுத்தேன். டாக்டர் ராஜேஷ் பிரேத கூறாய்வு செய்தபோது அதனை வீடியோ எடுத்தார். பிரேத பரிசோதனை முடிந்தபிறகு அங்கேயே டாக்டர் சம்பத்குமார் முன்பே போட்டோ எடுத்த சோனி கேமராவில் இருந்து டாக்டர் சம்பத்குமாரின் கம்யூட்டரில் ஒரு காப்பி எடுத்துவிட்டு டாக்டர் சம்பத்குமாரிடம்

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

கேமராவை ஒப்படைத்தேன். அப்போது டாக்டர் சம்பத்குமாரிடம் சென்று அவரிடம் இருந்த போட்டோ நகல்களை பென்டிரைவில் டாக்டர் சம்பத்குமார் காப்பி எடுத்து என்னிடம் கொடுத்தார். அந்த பென்டிரைவ் பவர்பாயிண்ட் புரொஜெக்டரில் பொருத்தப்பட்டு அதில் உள்ள கோகுல்ராஜ் பிரேத கூறாய்வு சம்மந்தப்பட்ட புகைப்படங்கள் திறந்த நீதிமன்றத்தில் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திரையில் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக டாக்டர் சம்பத்குமார் வழங்கிய சான்றிதழ் அசாஆ 547 ஆகும். மேற்படி புகைப்படங்கள் அடங்கிய பென்டிரைவ் அசாஆ 548 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை (15 எதிரிகள் தரப்பில்)</u>

எனக்கு போட்டோகிராபி நன்றாக தெரியும். கவரேஜ், லென்சின் பவர், கோணங்கள் இவையெல்லாம் தெரிந்துதான் நான் போட்டோக்கள் எடுத்தேன். பிரேத பரிசோதனை செய்யும்போது முக்கியமாக எடுக்கவேண்டிய புகைப்படங்கள் என்ன என்ன என்பது பற்றி தெரியும். போஸ்ட்மார்ட்டத்தை புகைப்படம் எடுப்பதற்காக என் சீனியர் வேண்டிக்கொண்டதை தவிர வேறு யாரும் என்னிடம் வேண்டுகோள் கொடுக்கவில்லை. கோகுல்ராஜ் சடலக்கூறாய்வை தவிர அதற்குமுன்பு பிரேதங்கள் சடலக்கூறாய்வு செய்வதை அதற்கு முன்பாக நான் புகைப்படம் எடுத்துள்ளேன். கோகுல்ராஜின் சடலக்கூறாய்வை புகைப்படம் எடுப்பதற்கு என் சீனியர் டாக்டர் சம்பத்குமாரின் அறிவுரையை தவிர வேறு அறிவுரை எதுவும் இல்லை. எனக்கு சொந்தமாக கேமரா எதுவும் கிடையாது. இந்த சடலக்கூறாய்வுக்கு உபயோகித்தாக சொல்லும் கேமராவை அதற்கு முன்பும் நான் உபயோகித்திருக்கிறேன். கோகுல்ராஜ் பிரேத பிசோதனையை வீடியோ எடுக்கும்படி நான் பணிக்கப்படவில்லை. அன்று நான் வீடியோ எதுவும் எடுக்கவில்லை. புகைப்படங்கள் எடுக்க பல வகை கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். புகைப்படமும், வீடியோவும் எடுக்கும் கேமராவும் உண்டு. வீடியோ மட்டும் எடுக்கும் கேமராவும் உண்டு. புகைப்படம் மட்டும் எடுக்கும் கேமராவும் உண்டு. பொதுவாக கேமராக்களுக்கு Trade name, Manufacturing name உண்டு என்றால் சரிதான். ஒவ்வொரு கேமராக்களுக்கும் குறியீடு உண்டு என்றால் சரிதான். Pendrive க்களுக்கும் கம்பெனி பெயர் மற்றும் குறியீடு எண் இருக்கும் என்றால் சரிதான். நான் கோகுல்ராஜின் சடலக்கூறாய்வை நான் புகைப்படம் எடுத்தபோது அந்த சடலக்கூறாய்வு வீடியோவிலும் பதிவு செய்யப்பட்டது. அசாஆ 548 பென்டிரைவ் போலீசால் என்னிடம் வழங்கப்பட்டு அதில் பதிவுகள் எடுக்கப்பட்டது. மேற்படி பென்டிரைவ் CBCID ல் பணிபுரியும் சுதா என்பவருடையது என்பது அதில் உள்ள புகைப்படத்தில் துலங்குகிறது என்றால் சரிதான்.

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

நான் மேற்படி புகைப்படங்களை எடுத்தது சம்மந்தமாக CBCID போலீசார் என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை. அசாஆ 548 பென்டிரைவ் ஐ நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று பேராசியர் டாக்டர் சம்பத்குமார் என்னிடம் நேற்று கூறினார். டாக்டர் சம்பத்குமார் அசாஆ 548 பென்டிரைவ் போலீசாரிடம் ஒப்படைத்தார். பேராசிரியர் சம்பத்குமாருக்கு கணிணியை பயன்படுத்த தெரியும். அசாஆ 548 பென்டிரைவ் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டது என்னிடம் விவரம் கேட்டுத்தான் கொடுக்கப்பட்டது. அசாஆ 548 பென்டிரைவ் போலீசில் கொடுக்கப்பட்ட பின்னர் நான் அதை திரையில் போட்டு பார்க்கவில்லை, தற்போது நீதிமன்றத்தில் அதை திரையில் காட்டும்போதுதான் பார்த்தேன். அசாஆ 548 பென்டிரைவ் ல் உள்ள புகைப்படங்கள் என்னால் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த புகைப்படங்கள் போலீசாரால் பின்யோசனை செய்து தயாரிக்கப்பட்டு என் மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக பென்டிரைவ் ல் நகல் எடுக்கும்போது புகைப்படம் எடுத்த தேதி அதில் துலங்கும் என்றால் சரிதான். ஆனால் கணிணியில் தேதி சம்மந்தப்பட்ட பகுதி சரியாக இயங்காவிட்டால் தேதி துலங்காது. ஒவ்வொரு புகைப்படத்திற்கும் அது எடுக்கப்பட்ட தேதி இருக்கும் என்றால் சரிதான். அசாஆ 548 இல் ஒரு புகைப்படம் 4.6.2012 அன்று 11.30 மணிக்கு Modified செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். கணிணியில் Modified என்று காட்டினால் அவ்வாறுதான் தெரியும். எனது சீனியர் டாக்டர் சம்பத்குமார் தற்போதும் பணியில் இருக்கிறார்.

**மறுவிசாரணை : இல்லை**

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com